தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஐப்பசிமீ 6௳ (22-10-'22.) | ப. 25.

விஷய அடக்கம்.

1. வர்த்தமானம் 250
2. சாரதா ஸல்லாபம் .... „
3. சோதிடப்புலி சோணாசலம் 251
4. தஞ்சை ஜில்லா நிலவரித்திருத்தம் 252
5. ராதையின் குழந்தை 253
6. தனவந்தனும் ஏழையும் 255
7. புயற்காற்று 256

தமிழ் உலகு
ADVERTISEMENT RATES
(PER INSERTION)

Per	1	Page	Rs. 9
Per	½	Page	Rs. 5
Per	¼	Page	Rs. 3

Apply to
The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு
சந்தா விகிதங்கள்
(தபால் கூலி உள்பட)
வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.
மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

தமிழர் நேசன்.
சாஸ்திர அறிவைப் பரவச் செய்யும் மாதாந்தப் பத்திரிகை.
இது தமிழர் கல்விச் சங்கத்தால் வெளியிடப்படுவது
பட்டமும் பரிசும் பெற்ற பல மேதாவிகளால் எழுதப்பட்டது. பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் படித்தறிதற் பொருட்டு மிகவும் எளிய நடையில் உள்ளது. சாஸ்திர விஷயங்களைத்தவிரப் பல கதைகளையும் குறிப்புகளையும் உடையது.
அநேகச் சித்திரப்படங்களோடு கூடியது.
கல்வி இலாகா டைரெக்டராலும், ஜில்லாபோர்டு தாலூகாபோர்டு தலைவர்களாலும், பள்ளிப் போதகர்கள் பலராலும் ஆதரிக்கப்பட்டது. உள் நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகைகளால் புகழப்பட்டது.
வருஷச் சந்தா மூன்று ரூபாய்.
கௌரவக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம், மைலாப்பூர்.

வர்த்தமானம்

முடேனியா என்ற ஸ்தலத்தில் துருக்கியப்பிரதிநிதியாக இஸ்மெட் பாதுஷாவும் நேசதேசப்பிரதிநிதிகளும் கூடி, ஸமாதானத்திற்கு பூர்வாங்கமான ஓர் ஏற்பாட்டிற்கு உடன்பட்டு விட்டார்கள். திரேஸ் பிரதேசத்தின் கீழ்பாகத்தை துருக்கியர்களுக்கு விட்டுவிடுவதென்றும், டார்டனல்ஸ் ஜல சந்தியை சார்ந்திருக்கும் பிரதேசத்தில் ஓர் சிறிய பாகத்தை ஸர்வ தேசங்களுக்கும் பொதுவே வியாபார சௌகரியத்திற்காக வைப்பதென்றும் அவ்வேற்பாட்டின் முக்கிய நிபந்தனைகள். மான்செஸ்டரில் லாயிட் ஜியார்ஜ் உபன்னியாஸம் செய்தபோது, தன்னுடைய ராஜ்யதந்திரத்தினால் தான் ஸமாதானம் ஏற்பட்டதென்றும், சண்டைக்குத் தயாராக சைன்யங்களை முன் வைத்ததனால் தான் துருக்கியர்கள் படிந்துவந்தார்களென்றும், ப்ளாக்ஸீ வழியாக உணவு பொருள்கள் வருவதற்கு தடைபடாமலிருக்க டார்டனல்ஸ் ஜலஸந்தி தங்கள் காவலில் இருக்கவேண்டியது முக்கியமென்றும் இவ்வாறாகத் தான் கைக்கொண்ட வழியைத் தாங்கிப்பேசினார்.

மகா யுத்தத்தில் துருக்கியரிடமிருந்து கவரப்பட்ட மெஸபொடேமியா தேசம் ஸர்வ தேச சங்கத்தாரால் ஆங்கிலேயர்களிடம் பாதுகாப்புக்கு ஒப்புவிக்கப்பட்டு, ஆங்கிலேய ராணுவ அதிகாரிகள் இதுவரை ஏராளமான பணச்செலவில் ஆட்சி புரிந்து வந்தார்கள். அங்கு பெய்ஸல் என்பவரை அரசராக நியமித்து, ஜன நாயக ஆட்சிக்குரிய கோட்பாடுகளை வரைந்து, கடைசியாக இப்போது அவ்வரசருடன் உடன்படிக்கை செய்துகொண்டு விலகுவதற்கு வழிதேடியிருக்கிறார்கள். அவ்வுடன்படிக்கையின்படி ஆங்கிலேயர்கள் பணவுதவி கொஞ்சகாலத்திற்கு செய்துவருவதாகவும், அவ்வரசர் வெளி நாடுகள் ஸம்மந்தமாய் நடவடிக்கைகளை ஆங்கிலப்பிரதிநிதியின் புத்திமதிக்கிணங்கியே நடத்துவதென்றும் ஏற்பட்டிருக்கிறது.

குருகா பாக்கில் அகாலியர்கள் இடைவிடாது தங்கள் பாத்தியதையை நிலைநிறுத்த முன்வந்துகொண்டிருக்கிறார்கள். கவர்மெண்டாரும், மகந்து மதஸ்தல ஸ்தாபனங்களை வெகு காலமாய் அனுபவித்து வருவதனால், நியாயமாய் மகந்து வைக்காப்பாற்றவேண்டியது தங்கள் கடமையென்று சொல்லி, அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொண்டும் தீரர்களாயுமிருக்கிற அகாலியர்களை கைது செய்துகொண்டும் தண்டித்துக்கொண்டுமே வருகிறார்கள். தண்டனைக்குக்கொண்டு போகப்பட்டபோது அகாலியர்கள், தங்கள் பெயர்களையும் சொல்வதில்லை எதிர்வாதமும் செய்வதில்லை. ஓர் தடவை விசாரணை செய்யப்பட்டு தண்டனையடைந்த ஒரு கூட்டத்தார், ஏதோ அதிகாரிகளின் தவறால் மறுபடியும் விசாரணைக்கு கொண்டு போகப்பட்டு தண்டனையிடப்பட்டார்கள். பென்ஷன் பெற்று வரும் சீக்கியர்களும் இப்போராட்டத்திற்கு முன்வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் விசாரணையும் தீவிரமாய் நடந்து முடிவாயிருக்கின்றது.

ஆங்கில தேசத்தில் 'மான்செஸ்டர் கார்டியன்' என்ற பெயர் வாய்ந்த பத்திரிகையின் பிரதிநிதியாக 'க்வின்' என்பவர் சில மாதங்களாக இந்தியாவில் பல இடங்களில் சுற்றிக்கொண்டு பத்திரிகைக்கு எழுதிவருகிறார். சுயராஜ்யப்போர் எவ்விதம் இந்தியாவில் நடைபெறுகிறது என்றும் இன்னும் மற்ற முக்கியமான விஷயங்களைப்பற்றியும் நேரில் பழகித் தெரிந்து ஸமாசாரங்களை யனுப்புவதற்கே இவர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறாராம். இவர் அனுப்பும் ஸமாசாரங்களெல்லாம் இந்தியர்களை இகழ்வதையே கருத்தாகக் கொண்டன. ஓர் ஸமயம் ஓர் கிராமத்திற்குப் போய் அங்கு ஓர் குடியானவனைக்கண்டு சுயராஜ்யமென்றால் என்ன வென்று கேட்டதாகவும் அவன் அதைப்பற்றி ஏதோ பிதற்றினதாகவும்; மற்றொரு ஸமயம் ஆமதாமாதில் நெசவுசாலை சொந்தக்காரரை ஒத்துழையாமையைப் பற்றிய அபிப்பிராயம் வினவியதாகவும், அதற்கு அவர் தனக்கு அதைப்பற்றி நல்ல அபிப்பிராயமில்லை யென்றதாகவும், ஆனால் மகாத்மா காந்தியினுடைய செல்வாக்குக்கு பயந்து அக்கொள்கைக்கு இணங்குவதாயும்; வேறொரு ஸமயம் ஏதோ ஒரு ரயில்வேஸ்டேஷனில் பிரயாணிகள் டிக்கட் வாங்குவதற்குப் படும் பாட்டை கவனித்துக் கொண்டிருந்ததாகவும், இவ்விதம் ஒழுங்குடன் நடந்துகொள்ளத் தெரியாத பாமரஜனங்கள் எவ்விதம் சுயராஜ்யம் புரிவார்களென்றும் இந்தப் பத்திரிகைப் பிரதிநிதி எழுதிக்கொண்டு வருகிறார். இப்போது இவர் லக்னவ் ஜெயிலிலிருக்கும் பண்டித ஜாவேரிலால் நேரு அவர்களைக் காணப்போயிருக்கிறார்.

தற்கால பிரிடிஷ் பார்லிமெண்டில் மெஜாரிடியாயிருக்கும் கன்ஸர்வேடிவ் கட்சியார் கார்ல்டன் க்ளப்பில் கூடிபேசியதில், லாயிட்ஜியார்ஜை முதன்மையாகக்கொண்ட மந்திரி சபையாருக்கு இனி ஆதரவு கிடையாதென்று தீர்மானித்ததால், லாயிட் ஜியார்ஜ் முதலிய மந்திரிகள் ராஜீநாமா கொடுத்துவிட்டார்கள். சக்ரவர்த்தியார் அதை அங்கீகரித்து, போனர் லா என்ற கன்ஸர்வேடிவ் பிரமுகரை தன் தலைமையில் புதிய மந்திரி சபை கூட்டி நிர்வாகிக்க உத்தரவளித்திருக்கிறார்.

சாரதா ஸல்லாபம்

துருக்கி சம்பந்தமாய் இங்கிலாந்து முதன் மந்திரியார் போருக்கு சித்தம் செய்தது, அவர் ஆழந் தெரியாமல் சேற்றில் காலிட்டுக் கொண்டது போலாயிற்று. மேல்நாட்டு மற்றைய துரைத்தனத்தாருடைய அபிப்பிராயமுணராமலும் தம் தேசத்துப் பொதுஜனங்களின் மனது எவ்வாறிருக்கிறதென்று தெரிந்துகொள்ளாமலும் அவர் பிரவேசித்தது அவர் அறிவிற்கழகல்ல. அவர் எப்பொழுதும் தனது அபிப்பிராயங்களை சரியான நிலையில் நிறுத்தாது சமயத்திற்கேற்றபடி மாற்றுபவரென்று வெளியாகிறது. சாதகபாதகங்களை தீர்க்கமாய் ஆலோசித்துக் கார்யத்தில் எத்தனிப்பதே மந்திரிக்கு அழகு. அல்லாது ஆத்திரப்பட்டு பிரவேசிப்பது அவமானத்திற்கிடமாகும். இராஜ்ய நிர்வாகத்திற்கு அவசியமான அநேக குணங்களில் மனம் ஒரு நிலைப்படல் வேண்டும். எவர் சொல்வதும் சரியென எண்ணுதலும் அறிவுக்கு அடையாளமாகுமா? முதன் மந்திரியவர்கள் இந்தியாவிலுள்ள ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் நிலைமையைப்பற்றி அவசரப்பட்டுக் கூறியவைகள் தன்னுடைய அபிப்பிராயமல்ல வென்றும், பிறர் சொல்வதைக் கேட்டுச் சொல்லவேண்டிவந்ததென்றும் கேழ்வி. இவ்வுயர்ந்த பதவியிலிருப்போருக்கு இதுவும் கூடுமோ?

சீமையில் பெர்நாட் ஷா என்னும் ஞானவான் ஜன ஆட்சியுள்ள தேசங்களில் உத்தியோகத்திற்குத் தக்க புத்தியும் பழக்கமுமுள்ளவர்களைத் தெரிந்தெடுப்பதில்லையென்றும், அவ்வாறு செய்வதினால் இங்கிலாந்துக்கு கொஞ்ச காலமாய் அநேக கஷ்டங்கள் நேர்ந்தனவென்றும் கூறுகிறார். நெடுநாளாய் ஜன ஆட்சியிலிருக்கும் இங்கிலாந்திலேயே இவ்வாறாயிருந்தால், அம்மாதிரியான ஆட்சிக்கடிப்போட்டுக் கொண்டிருக்கும் இந்தியாவில் எப்படியாகும் என்பது சொல்லவேண்டுவதில்லை. தற்காலத்தில் சென்னை மாகாணத்தில் துரைத்தனம் வகித்திருக்கும் 'நியாய கட்சியார்கள்' உத்தியோகஸ்தர்கள் நியமன விஷயமாய் செய்திருக்கும் ஏற்பாடுகள் அவ்வாறான கேட்டுக்கு இடங்கொடுக்காது என்றுசொல்ல முடியவில்லை. ஆனால் நெடுநாள் பசித்திருந்தவன் அன்னத்தைக் கண்டவுடன் தேகத்திற்கு உபத்திரவம் உண்டுபண்ணுமெனக் கூட கவனியாது ஆவலுடனுண்பவன் போலானார்கள். உட்கார்ந்து படுக்கவேண்டுமென்பதை யறியாது, உடனே எல்லா உத்தியோசங்களிலும் தங்கள் கட்சியார்களை நியமிக்க எண்ணுகிறார்கள். அதினால் அவர்கள் உத்தியோகத்திற்கு வேண்டிய படிப்பும் பழக்கமுமில்லாமற் போனாலும் நியமிக்கப்படுகிறார்கள். இது கடைசியாய் தர்க்க சாஸ்திரம் தெரிந்த வித்துவான் நெய் வாங்கப்போன கதையாய் முடியுமோவென வேங்குகிறேன்.

இந்தியா ஜனசங்கத்தார் சட்ட நிர்மாணசபைக்கு பிரதிநிதிகளனுப்புவதா இல்லையாவென்பதில் அதிகக் கலக்கமடைந்திருப்பதாகத் தெரிகிறது. அதற்குக்காரணம் இப்பொழுது அச்சபைக்குள் பிரவேசித்திருக்கும் தேசாபிமானிகள் பொதுஜனங்களுக்கு நன்மை செய்ய முடியாமலிருப்பதும் மற்றும் சிலர் துரைத்தன உத்தியோகஸ்தர்களுடைய அபிப்பிராயங்களுக்கிணங்கி நடப்பதே தங்களுக்கு லாபகரமென எண்ணுவதுமே யாகும். இந்நிலைமையை நோக்கும்பொழுது ஜனசங்கத்தார் ஏதோ தொத்துவியாதியால் வருந்தும் ஒரு நண்பனைப்போய்ப்பார்ப்பது தகுமா கூடாதா என்பவரைப்போலிருக்கிறார்கள். தாங்களும் சபையில் பிரவேசித்தவுடன் துரைத்தனத்தார் வலையில் சிக்கிக்கொள்வோமென பயந்தால் இவர்கள் தேசாபிமானத்தில் த்ருடமான நம்பிக்கையுள்ளவர்களெனவும் கூறலாமோ? இப்பொழுது அவர்களுடைய சபையில் பிரவேசித்து தமது ஆற்றல் முழுவதும் காட்டி, அங்குள்ளவர்களையும் தமதபிப்பிராயத்திற்கிணங்கும்படி செய்வது தேசத்தின் நன்மையை விருத்திசெய்வதாகும். இதன்றி பரீட்சையில் தேர்ந்தவன் புஸ்தகத்தை வெறுப்பதுபோல் ஒதுங்கி நிற்பது நகாதெனத் தோன்றுகிறது.

சோதிடப்புலி சோணாசலம்.

('ராமசந்திரர்.')

நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு சாப்பாடானவுடன், என் வீட்டுப் புறத்திண்ணையில் உட்கார்ந்து, காற்று மரங்களின் இலைகளைத் தழுவி உண்டாக்கும் கீதத்தைக் கேட்டுக் கண் மூடிக் களித்திருக்கையில், குழந்தை 'அப்பா, யாரோ பூச்சாண்டி வந்திருக்கிறான்,' என்றது. கண்விழித்துப் பார்த்ததும், சோணாசலம் எதிரில் நின்றான்.

'வா, அப்பா சோணாசலம், என்ன இரண்டு மாதமாய்க் காணவில்லை! எங்கே வேட்டையின் மேல் சென்றிருந்தாயோ?'

'அடே, நீயும், என்ன, ஜோஸியம் சொல்ல ஆரம்பித்துவிட்டாய். நான் முன் உன்னைக் கண்டபிறகு நாகை வக்கீல் நாகலிங்கம்பிள்ளை உடனே வரும்படி அவஸரத்தந்தி கொடுத்திருந்தார். அங்கு சென்று, அவர் வீட்டிலிருக்கையில், தஞ்சையிலிருந்து சஞ்சீவிராயர் மனுஷியனை யனுப்பி என்னை யழைத்துப்போய் விட்டார். பிறகு மதுரை மளிகை வியாபாரம் மாணிக்கம்பிள்ளை ஏதோ வியாபார விஷயமாய் என்னைக் கேட்கவேண்டி, அவஸரமாய் ஆளை யனுப்பினார். அங்கு சென்றேன். இவ்வாறாக பல இடங்களில் சென்றதனால் உன்னைப்பார்க்க முடியவில்லை' என்று கூறியவுடன், உள்ளிருந்து என் தாயார் மெதுவே வாசற்படியண்டை வந்து கையைக் கண்மேல் வைத்துக்கொண்டு குனிந்து பார்த்தாள். அப்போது சோணாசலம் 'என்ன அம்மா பார்க்கிறீர்கள்! என்னை யடையாளம் தெரியவில்லையா? நான்தான் சோணாசலம்' என்றான்.

'அடேயப்பா சோணாசலமா! சாதாரணமாய் இருந்தாலேயே எனக்கு நன்றாய் அடையாளம் தெரியாதே. நீ தாடியும் மீசையுமாயிருந்தால் எப்படி யடையாளம் தெரியும். இப்பொழுது என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?'

'அம்மா, அவன் புளுகு மண்டிவியாபாரம் செய்துகொண்டிருக்கிறான்.'

'அடே, நீ எப்போதும் எதாவது விதண்டாவாதமாய் பேசுகிறாய். புளுகு மண்டியாவதுடா!'

'நீ வேண்டுமானால் அவனையே கேட்டுப் பாரேன். அவன் பெயர் சோதிடப்புலியென்று வைத்துக்கொண்டிருக்கிறான். நான் சொல்வதில் என்ன பிசகு?'

'எண்டாப்பா சோணாசலம், ஜோஸியமா சொல்லுகிறாய் நீ! ஜோஸியத்தில் உனக்குப்புலியென்று பெயரா?'

"அம்மா, நான் ஜோஸியம் சொல்லுவது நிஜந்தான். ஆனால் என் பெயருக்கு முன்னால் புலியென்று பெயர் வைத்துக்கொண்டிருப்பதற்கு காரணம் இன்னதென்று கொஞ்சம் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் முன்பு பரீட்சையில் தேறவில்லையென்று பெட்டியிலிருந்து பணத்தை யெடுத்துக்கொண்டு ஓடிப்போனபொழுது, நேராக குற்றாலம் ஸ்நான கட்டத்தைப்போயடைந்தேன். அங்கருவியில் ஸ்நானம் செய்தவுடன், அங்கு காணப்பட்ட மார்க்கத்தின் வழியே சென்றேன். அங்கே மலைகளிலுள்ள மரஞ்செடி கொடி முதலியவற்றின் அழகை கவனித்து என் பசியையும் மற்ற துன்பங்களையும் மறந்து பொழுதுபோனது தெரியாமல் சென்றுகொண்டேயிருந்தேன். கொஞ்சநேரத்திற்கெல்லாம் இருளடைந்து விட்டது. நானும் திரும்பிவர வழி தெரியாதவனாய் தற்செயலாய் அங்கு காணப்பட்ட ஒரு குகையை அடுத்து உறங்கிவிட்டேன். பிறகு நான் விழித்துக்கொண்டபொழுது, என் எதிரே இரண்டு தீச்சுடர்போன்ற கண்களோடு ஒரு புலி உட்கார்ந்திருந்தது. அப்பொழுது என் மனநிலை எவ்வண்ணமிருந்ததென்று எனக்கே தெரியவில்லை. புலி அருகிலிருந்தும் என்னைத் தனக்கு இரையாக்காது விட்டிருந்ததற்கும் காரணம் தோன்றவில்லை. தெய்வானுகூலத்தால் நான் எழுந்திருந்து அப்புலியின் அடியைப் பணிந்து நின்றேன். அப்புலியும் தனது கையை

என் தலைமீது அருளோடு வைத்தது. பிறகு நானுங் கொஞ்சம் தைரியங்கொண்டு என்னுடைய ஸ்திதியை முறையிட்டேன். அப்பொழுது அப்புலியுருக்கொண்ட முனியும் கருணையோடு என்னைப்பார்த்து 'அப்பா உன்னை இங்கு கொண்டுவந்துவிட்டது உனது நல்லகாலமே. உன்னாலேயே உலகுக்கும் அதிக நன்மைகள் உண்டாகப்போகிறது. இதுவரை யாவரும் அறியாத பெரிய விஷயம் உனக்கு உபதேசிக்கப்போகிறேன். நீ உலகத்தில் சோதிடத்தில் வல்லவனென விளங்கப்போகிறாய்' என்றார். அதைக்கேட்ட நானும், 'சுவாமி, தற்காலத்தில் சோதிடத்தில் நம்பிக்கை மிகவும் குறைந்திருக்கிறது. சோதிடத்தினால் பிழைப்புண்டாகுமோவெனச் சந்தேகிக்கிறேன்,' என்றேன்.

அதைக்கேட்ட முனியும் சிரித்து, 'அப்பா சோதிடத்தில் நம்பிக்கை குறைந்ததற்கு காரணம் இப்போது சொல்லுபவர்கள் காலத்திற்கேற்ற சாஸ்திரப்படி சொல்லாததாகும். முன்னமே, காலகாலனாகிய அரனை யடுத்து, அம்பிகை எந்தெந்த யுகங்களில் எந்தெந்த சாஸ்திரம் பிரபலமாகுமெனக் கேட்க, அவரும் பின் வருமாறு கூறினார்.

முன்னையோர் கிருதந்தன்னில் முக்காலு முணர்வரெல்லாம்
பின்னையோர் திரேதந்தன்னில்பிருகுநாடி பலிதமாகும்
மன்னிய துவாபரத்தில் குரு நாடி புலவா நிற்கும்
கன்னியே கலியதனில் சனி நாடி திகழும் காணே.

ஆகவே இப்படிக்கிருக்க, தற்காலத்தில் உலகில் சோதிடர் சொல்லுபவரெல்லாம் இச்சனிநாடி சொல்வதை யுணராமல் மற்றைய கிரந்தங்களின் வழியே சொல்வதனால் பயன் தருவதில்லை. இச்சனி நாடி லக்ஷத்து ஒன்பதாயிரம் பாடல் களுடையது. இதை அரன் முதலில் அகஸ்தியருக்குரைக்க, அவரும் எனக்குரைத்தார். நான் இதைப் பெறத்தக்க பக்குவமுள்ள சிஷ்யனைக்காணாமல் தேடியிருந்தேன். தெய்வமே உன்னை இங்கு கொண்டு வந்து விட்டது. உனக்கு நான் இதை உபதேசிக்கிறேன்' என்று சொல்லி என் நாக்கை யிழுத்து அதில் தன்து நகங்களால் எழுதிவிட்டார். உடனே நானும் என்னையறியாது ஆனந்தமடைந்து அவரை மறுபடியும் அடிபணிந்து எழுந்து நின்று கண்களில் நீர்ததும்ப பின்வருமாறு துதித்தேன்.

மெலி வெய்தி துயருழக்கும் உலக மெல்லாம்
பொலிவெய்த பொய்யுரைத்து மெய்யகற்றும்
கலியதனிற் கண்கண்ட கடவுளாலும்
புலியுருவாம் புண்ணியனே போற்றி போற்றி.

இவ்வாறு துதித்து நின்ற என்னை நோக்கி, முனிவர் 'அப்பா, உனக்கு இனி ஒரு குறைவுமில்லை. நீ எங்கு சென்றாலும் உன்வாக்கு தடைபடாமல் இருக்கும். நீ உலகை யடையலா'மெனச் சொல்லி எனது கண்களை அவர் கையால் மூடினார். சிறிது நேரம் கழித்து அவர் கையை யெடுத்தவுடன் விழித்துப் பார்த்தபோது அருவியின் கீழ் வந்திருந்தேன். அது முதல் எனது ஆசாரியனாகிய புலியருடைய பெயரை எனக்கு முன் வைத்துக்கொண்டு வியவகரிக்கின்றேன்."

இதைக் கேட்ட அம்மாள், 'அடே, என்ன விபவம்! பெரியவாள் இல்லாமலா உலகத்தில் மழை பெய்கிறது. நீ யெப்பொழுதும் எல்லாவற்றையும் பொய் யென்கிறாய். கேட்டாயா இவனுக்கு நடந்த விசேஷத்தை!'

'அம்மா, பெரியவாளும் சித்தர்களும் ஜீவிப்பது மூடபக்தர்களாலல்லாது வேறல்ல. ஆகையால் மூடபக்தர்களே எல்லாவற்றிற்கும் காரண பூதர்கள். அவர்களை விட்டு விட்டு பெரியவர்களைப் புகழ்வது சரியன்று.'

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கையில், சோணாசலம் ஏதோ தனக்கு அவசியமாக வேலையிருப்பதாகவும், அதற்கு உடனே போகவேண்டுமென்றும், மறு ஞாயிற்றுக் கிழமை வருவதாயும் சொல்லி விட்டுச் சென்றான்.

தஞ்சை ஜில்லா நிலவரித் திருத்தம்

[Re—Settlement]

(ஓர் மிராசுதார்)

இந்தியாவில் பிரிடிஷ் அரசாங்கம் தொடங்கிய காலம் முதற்கொண்டு இதுவரை நிலமெல்லாம் தங்களுடையதென்றும், அனுபவிப்பவர்கள் யாவரும் தங்கள் அனுமதி பெற்று குடிக்கூலி கொடுத்துவரும் குடிகளென்ற கொள்கையை அரசாங்கத்தார் பலவிதங்களில் கொண்டாடி வருகிறார்கள். இதன் தத்துவம் விளங்கவில்லை. அரசாங்கத்திற்காக பிரஜைகளா, பிரஜைகளுக்காகவா அரசாங்கம். பிரஜைகளுக்காகத்தான் அரசாங்கம் என்பது உண்மையானால் மேற்காணும் கொள்கை ஒழியவேண்டும். தஞ்சை ஜில்லாவில் முப்பது வருஷத்துக்கு ஓர்முறை குடிக்கூலியென்று வாங்கப்பட்டு வரும் நிலவரி தீர்மானப்பட்டு வருகிறது. மறு செட்டில் மெண்டு என்றால் எப்போதும் கிஸ்தியை அதிகப்படுத்துவதென்றே அதிகாரிகள் கருதுகிறார்கள். முப்பது வருஷங்களுக்கு முன்பாக நெல் விலை குறைவாயிருந்ததாயும் இப்போது விலை அதிகரித்திருப்பதாயும், அதிகப்பணம் குடிக்கூலியாகக் கொடுக்க குடிகள் சக்தி பெற்றிருக்கிறார்களென்றும் அதற்குக் கடமைப்பட்டுமிருக்கிறார்களென்றும், அதிகாரிகளுடைய எண்ணம். இத்தடவை நிலங்களின் செழிப்பு, பாய்ச்சலாதாரம், தான்ய வேறுபாடுகள், மகசூல், பயிரிடும் செலவுகள் இவைகளைப்பற்றி விசாரணை செய்து நிலங்களின் தாரதரங்களை மாற்றப்போவதில்லையாம். நஞ்சை நிலங்களில் உண்டாகும் தானியங்களின் விலை சராசரிக்கு 100-க்கு 85 பங்கு அதிகமாயிருக்கிறதாம். புஞ்சை தானியங்கள் 100-க்கு 100-ம் அதிகமாயிருக்கிறதாம். அதனால் முன் செட்டில்மெண்டில் பகுத்துள்ள முதல் ஆறு தரங்களில் சேர்ந்த நஞ்சை நிலங்களில் 100-க்கு 25 அதிகமாயும், மற்றைய எல்லா நிலங்களுக்கும் $18\frac{3}{4}$ அதிகமாய் குடிக்கூலியை உயர்த்துவதென்றும் செட்டில்மெண்டு ஆபீஸர் சிபார்சு செய்திருக்கிறார். இச்சிபார்சுகளை கவர்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

விவசாயம் மற்றதொழில்களைப்போலவே, ஓர் தொழில் என்பது எல்லாரும் ஒப்புகொள்ளக் கூடியது. அதிலும் முதலாளிகள் முதல்போட்டு வேலைசெய்து ஊதியத்தைப்பெறுகிறார்கள். எத்தொழிலைக் கைக்கொள்ளவும் ஜனங்கள் சுயேச்சையுள்ளவர்கள். அரசாங்கத்தார் பல தொழில்களைக் கைக்கொள்ளும் ஜனங்களை காப்பாற்றி ஜனங்களுடைய சௌகரியத்தை கவனித்து வரவேண்டும். அல்வாறில்லாது தொழில்களைத் தாங்களே கைக்கொண்டுபிரஜைகளுக்கு வேலையிட்டு ஊதியம் பெற நினைப்பது உசிதமில்லை. இவ்விதமிருக்கையில், அரசாங்கத்தார் தாங்களே நிலங்களுக்கு சொந்தக்காரர்களெனவும் ஆகவே முதலாளிகளென்றும்

கொண்டாடுவது எவ்விதம் பொருந்தும். ராஜ்ய நிர்வாகச்செலவு அதிகமாயிருக்கிறது, நிலங்களை அனுபவிப்பவர் வரி விதித்துக்கொண்டு கொடுக்க சக்தியுள்ளவர்களென்று ஜனப்பிரதிநிதிகளிடம் எவ்விதமாகவாவது முறையிட்டு, ஏன் செலவுக்குப் பெற்றுப்போகக் கூடாது. கேட்டெடுத்துக் கொள்ளவேண்டியதென்று ஒன்றும் தானாக எடுத்துக்கொள்ள கூடியதாக வேறும் இருக்கவேண்டுமோ!

ராதையின் குழந்தை

(S. V. கோபாலகிருஷ்ணய்யர், M.A., M.L.,)

“என் கண்மணியை வாயிற் புறத்தில் விட்டிருந்தேன். என் கண்ணே! என் முத்தே! அவனை யார் கொண்டுபோய் விட்டார்கள். என் குழந்தையை வாயிலில் விட்டிருந்தேன், என் முத்தே! என் கண்மணி” என்று கதறிக்கொண்டு, புத்தி ப்ரமை பிடித்தவள் போல், ராதை யங்குமிங்கும் தன் குழந்தையைத் தேடியலைந்தாள். சிறு பிராயத்திலேயே, தன் கணவனை யிழந்து, ராதை நிர்கதியானாள். குழந்தையாவது ஆயுஸுடனிருந்து, பெரியவனாகி, தனக்கு ஆறுதல் செய்வானென்று எண்ணியிருந்தாள்.

“குழந்தையின் இடுப்பில் அரைச் சதங்கையைப் போட்டுவிடாதே யென்று நான் அன்றைக்கே சொன்னேனே! உனக்கு வந்த கஷ்டம் போதாதா, நமக்கு? உன் கண்மணியை விளையாட்டிற்காக ஒளித்து வைத்திருக்கிறாளா வென்று அடுத்தகத்து லக்ஷ்மியைக் கேள்”.

“ஐயோ! நேற்றைக்கு இங்கே கள்ளர்கள் வந்தார்கள். அப்பொழுதே, அவர்கள் கூட்டத்தைக் கண்டவுடனேயே, யெனக்கு சந்தேகந்தான். அவர்களுக்கு பிச்சை போடப்போனபோது குழந்தை இடுப்பிலிருந்தது. கள்ளர்கள் திரும்பவும் திரும்பவும், குழந்தையின் தங்க நகையை யுற்றுப்பார்த்தார்கள்.”

கிழவி ராதையின் தாயார் சொன்னது சரியாயிற்று. குழந்தைகளைத் திருடும் கள்ளர் கூட்டமொன்று அந்த பிராந்தத்திற்கு வந்திருந்தது. நகைக்கு ஆசைப்பட்டு, அவர்கள் ராதையின் குழந்தையை கவர்ந்து சென்றார்கள். அன்று முதல் ராதை உன்மத்தை யானாள்.

தெருப் பெருக்கும் பறையர்கள் வாழும் சேரி

“பொன்னையா! ஓடிவா! இதைப்பாரு! தெய்வம் நமக்கு ஒரு வரந்தந்திருக்கிறது” என்று லக்கி தன் கணவனை யழைத்தாள். அவனும் ஓடிவந்து புதுமையைக் கண்டான். சுவரடியில், முள்கள்ளியின் அருகாமையில் ஒரு அத்புதமான குழந்தையிருந்தது. தீயோர் அணுகாமற் காப்பதுபோல், ஒரு பெரிய கரு நாகம் அக்குழந்தையின்மேல் படமெடுத்து நின்றது.

“அந்தப் பாம்பை யோட்டாதே! அதைத் தொந்தரவு செய்யாதே! கையில் ஒரு வரமுங்கொண்டு தெய்வமே அந்த ரூபமாக வந்திருக்கிறதென்று நினைக்கிறேன்.” ஆனால் லக்கி சொன்னதொன்றும் பயன் படவில்லை. தோட்டி பொன்னையா, வீட்டிற்குள்ளோடி, ஒரு பெரிய மூங்கிற்றடியை எடுத்துக் கொண்டுவந்தான். பாம்பும் அப்பொழுதுதான் ஒரு புதருக்குட் போய்க் கொண்டிருந்தது. அதின் தலையில் மூங்கிலால் ஒரு அடி விழவே, அதுவும் மடிந்தது.

“என்ன காரியம் செய்தாய் நீ” என்றாள் லக்கி. புன்னகை செய்யுங்குழந்தையை உடனே கையிலெடுத்து, மார்புடன் அணைத்து அதற்கு ஸ்தன்ய பானம் செய்வித்தாள். “ஐயோ! பாவம், சின்னதிற்கு நல்ல பசி. அந்தப்பாம்பை அநியாயமாய்க் கொன்றுவிட்டாயே! அதற்காக என்ன துன்பங்களையனுபவிக்கப் போகிறோமோ? நம் குழந்தையை நாம் இழந்ததுபோதாதா?”

மூன்று நாட்களுக்கப்புறம் பொன்னையாவுக்கு வைசூரி கண்டது. அது ஊரெங்கும் பரவி யிருந்தது. தொத்து வியாதியானதால் பொன்னையாவுக்கு வந்தது அதிசயமில்லை. ஆனால் லக்கி, பாம்பைக் கொன்றதாற்றான் வந்ததென்று சொன்னாள். குளக்கரையிலிருந்த பாம்புக் காவிற்குப் போய், தன்னால் இயன்றமட்டும் பலி கொடுத்தும் ஸர்ப்பசாந்தி செய்தும் பார்த்தாள் லக்கி. பிரயோஜனமில்லாமற் போய்விட்டது. பொன்னையா பரலோகம் சென்றான்; லக்கியும் விதவையானாள்.

பொன்னையாவுக்குக் கடன் இருந்தது. அந்தச் சேரியிலிருந்த மற்றத் தோட்டிகளைப்போல் அவனுக்கும் குடியில் அதிக பிரியம். அவன் சம்பளமும், அவன் சம்பாத்தியமும் சேர்ந்து குடும்பச்செலவிற்குக் காணவில்லை. அவனிறந்ததும், அவ்வூர் காசுக்கடைலப்பை யொருவன் வந்து, தனக்கு வரவேண்டிய கடனுக்காக, லக்கியைப் பரிதபிக்க விட்டு, குடிசையிலிருந்த செப்புப்பாத்திரங்கள், மண்வெட்டி, கோடாலி முதலான, சகல விலை பொருட்களையும் எடுத்துக் கொண்டுபோய் விட்டான். லக்கி அழுதாள், வைதாள், சாபமிட்டாள். லப்பை ஒன்றுக்கும் அசங்க வில்லை.

அவ்வூரிலிருந்த பட்டிண பரிஷ்கார சபை அக்கிராஸனாதிபதி தயாளுவாகையால், தோட்டிப் பெண்களின் சம்பளத்தைக் கூட்டினார். வாஸ்தவத்தில் குடிகாரக் கணவனுடன் வாழ்ந்த காலத்தைவிட, கைம்பெண் தசையில் லக்கிக்கு பணச்செழிப்பு அதிகமாகத் தானிருந்தது.

குழந்தைக்கும் வைசூரி வந்தது. அம்மை குத்தியிருந்ததினாற்றானோ, வேறு எந்த காரணத்தினாலேயோ, சிரமமில்லாமல் வியாதி நீங்கிற்று. முகத்தில் மட்டும் ஒன்றிரண்டு தழும்புகளிருந்தன; குப்பையிற் கிடந்த குழந்தை தோட்டிப் பையனாய் வளர்ந்து வந்தது. அனால் அந்த வேலைக்கு அவன் லாயக்காயிருக்கவில்லை.

“பொன்னன்” (அது தான், அந்தப்பையனின் பெயர்), ரயில்வே ஸ்டேஷனில் கூலிபோர்டரானான். தினந்தோறும் தாயிடம் இரண்டு அணாக்கள் கொண்டுவந்து கொடுப்பான். வயது சென்றாலும் அவள் இன்னும் பட்டண பரிஷ்கார சபையின்கீழ் சிரத்தையுடன் தோட்டிவேலை பார்த்து வந்தாள். பொன்னனுக்கு புத்திகூர்மை யதிகம். ஸ்டேஷனதிகாரிகளுக்கெல்லாம் அவன்பேரில் அதிக பிரியம். எப்படியும் அவன் ஜாதியிற் பறையனானதால் தன் ஜாதிமட்டிற் குள்ளடங்கியே வேலை செய்ய வேண்டியிருந்தது.

ஒரு நாள் ரயில் வந்ததும், அவன் ஒரு முதல் கிளாஸ் வண்டிக்குட் புகுந்தான். அவனுடன் போட்டிபோட வேறு இரண்டு கூலிகளும் வந்தார்கள். வந்த பிரயாணி ஒரு இந்து கனவான். பெரிய அதிகாரி போலும்; தாராளமாக கூலி கொடுப்பாரென்றெண்ணிப்போனான் பொன்னன். கனவானும் தன் பையை யெடுத்து அவன் கையிற் கொடுத்தார். மற்றக் கூலிகள் பொறாமையால் “சுவாமி! அவன் பறப்பைய” னென்றார்கள்.

"அப்படியா" வென்றார் பெரிய கனவான். பெருங்கோபத்துடன், கண்கள் தீப்பொறி பரக்க, பொன்னனிட மிருந்து பையைப் பிடுங்கி அவனை விரட்டினார்.

பொன்னன் நடுங்கிப்போய், ஓட்டம் பிடித்தான். வேறு பிரயாணிகளுக்குப் பணிசெய்து கூலிவாங்கவும் நேரமில்லாமற் போய்விட்டது.

பெரிய கனவான் ஸ்டேஷன் மாஸ்டரிடஞ் சென்று மேல் ஜாதி பிரயாணிகளையும், கீழ் ஜாதி போர்ட்டர்களையும் பற்றி என்னவோ சொன்னார். ஸ்டேஷன் மாஸ்டர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

நெரிபிடி தீர்ந்ததற்பின், ஸ்டேஷன் மாஸ்டர் பொன்னனை யழைத்து 'பொன்னு, நீ பிராமணர்கள் சாமான்களைத் தொடக்கூடா'தென்றார்.

"எஜமானே! எனக்கு தெரியாதா? ஆனால் இன்றைக்கு ஐயரவர்களே முதலில் என் கையில் சாமானைக் கொடுத்தார்கள்."

"பயலே! நீ பார்வைக்கு நல்ல லக்ஷணமாயிருக்கிறாய். புத்தியும் நன்றாய் வாய்ந்திருக்கிறது. உன் ஜாதி யின்னதென்றும் பார்வையால் நிர்ணயிக்க முடியவில்லை. இனிமேல் இப்படிச் செய்யாதே போ" வென்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

அன்று பொன்னன் வெறுங்கையாய் வீடுபோய்ச் சேர்ந்தான். "அம்மா! இன்றைக்கு என் துர்பாக்கியம், ஒன்றும் கிடைக்கவில்லை" என்றான் பொன்னன். நடந்ததை யெல்லாம் லக்கியிடம் சொன்னான்.

"நாம் பறையர்களானாலென்ன? நம் தேகத்திற்பாயும் ரத்தமும் சிவப்புத்தானே! நமக்கும் எலும்புந் தோலும் மில்லையோ? எல்லாரையும் போறானே நாமும். ஆனால், அந்த வண்டிக்குள் நீ யேன் போனாய்? ரயிலில் துரைகளொருவரும் வரவில்லையா?"

"அம்மா! அந்த வண்டிக்குப் பக்கத்தில் டவாலி யணிந்த வேலைக்காரர்கள் நின்றார்கள்; கூட்டமாயிருந்தது. ஏதோ, துரைதான் வந்திருக்கிறாரென்றெண்ணி, நான் போனேன்." "சரி! போனாற் போகிறது. குழந்தை! வா, இந்தக் கஞ்சியைக் குடி. தெய்வம் நமக்குத் துணையுண்டு." மற்றொருநாள், பொன்னனுக்கு அன்று நல்ல சம்பாத்தியம்; இரண்டுக்கு, நாலணாக்கள் கிடைத்தன. வீட்டை நோக்கி விரைந்து போகும்பொழுது, தன் கூட்டாளிகளிற் சிலர் ஒரு பக்ஷணக்கடையின் முன் நிற்பதைக் கண்டான். உள்ளேபோய் ஓரணாவுக்கு இட்டிலி வேண்டுமென்று கேட்டான்.

கடை வைத்திருந்தவன் பிராமணன். "சுவாமி! அவன் பறப்பைய"னென்றான் ஒருவன். "சீ! படுக்காளி! போ, தூர; உனக்கு என்ன அவ்வளவு தைரியமா" வென்று பார்ப்பான் அதட்டவே, அடி விழுமென்று பயந்து பொன்னன் ஓடினான். அங்கிருந்த அவன் கூட்டாளிப் பையன்கள் நகைத்தார்கள்.

கொஞ்சதூரம் போய் அவன் ஒரு சாராயக்கடை முன் நின்றான். அங்கே ஒரு கிழவி, தின்பண்டங்கள் வைத்து விற்றுக்கொண்டிருந்தாள். ஒரு அணாவுக்குப் பணியாரம் வாங்கினான். அது அதிகச் சூடாயிருந்தது. அதை எப்படியோ பொன்னன் தின்பதைப் பார்த்து ஒரு கிழவன் பரிகசித்தான். அநுபானமாகச் சாராயத்தை உள்ளே விட்டால், பணியாரமும் நன்றாய் ருசிக்குமென்றான். பொன்னன் சற்றே யோசித்தான். ஆனால் இன்னொருவனுஞ் சேர்ந்து அவனை யழைக்கவே, மூவரும் உள்ளே சென்றார்கள்.

அன்று பொன்னன் வீட்டிற்குப் போகும்பொழுது சற்று நேரமாயிற்று

"ஏனப்பா? ஏன் இவ்வளவு நாழிகை கழித்து வருகிறாய்" என்றாள் லக்கி.

பொன்னன் பதில் பேசவில்லை. மனம் வாடிக் கீழே யுட்கார்ந்தான். லக்கி, கள் நாற்றத்தை யறிந்து பொன்னனைத் தூற்றினாள். கோபம் மேலிட்டு "ஐயோ! நான் தொலைந்தே"னென்று கதறினாள்.

லக்கி இறந்தாள். பொன்னனும் அவன் மனைவியும் சேரியைவிட்டு நீங்கவேண்டிவந்தது. பொன்னன் நினைவிற்கு மேலாகவே, லக்கி பணஞ் சேர்த்து வைத்திருந்தாள். பொன்னன் கலியாணத்திற்காக தாராளமாக செலவு செய்ததற்கப்புறமும், பளபளவென்று பிரகாசிக்கும் வெள்ளி நாணயத்தில் ரூபாய் 120, ஒரு சிறு பையிற் கட்டி ஒரு பானையிற் போட்டு வைத்திருந்தாள். அந்தப் பணத்தை முதலாகப் போட்டு ஒரு சிறு பலசரக்கு மளிகை போடவேண்டுமென்று பொன்னன் ஆசைப்பட்டான். பெரிய கடைத்தெருவில் அவனுக்கு வியாபாரஞ்செய்ய இடம் கிடையாதென்பது தெரியும்; அதிக வாடகை கொடுத்து ஏதாவது ஒரு இடத்தை வாங்கினாலும் அவன் பறையனானதால் ஒருவரும் அவனிடம் வாங்க வரமாட்டார்கள். சேரியிற் கடை வைக்கலாம்; ஆனால் அங்கேயுள்ள பறையர்கள் மட்டுந்தான் வாங்குவார்கள். லாபம் அதிகமாய்க் கிடைக்க மார்க்கமில்லாமற் போய்விடும். நீண்ட ஆலோசனை செய்து சேரியிலேயே கடைவைக்கத் தீர்மானித்தான். சரக்கு வாங்குமிடமும் விதமும், அவனுக்குத் தெரியவில்லை. அந்த விஷயத்தில் என்ன செய்யவேண்டியதென்று புத்திசொல்லக் கூடிய மளிகைக்காரன் ஒருவன் அந்தச் சேரியிலிருந்தான். ஆனால், அவன் பொறாமையால் ஒன்றுஞ் செய்யத் தயாராயில்லை. தன் கடையே சிறிது; வரும் லாபம் கொஞ்சம்; அதில் பொன்னனும் போட்டிக்கு வந்துவிட்டால், இப்பொழுது கிடைக்கும் லாபமும் போய் விடுமோவென்று அவனுக்கு பயம்.

மேல் ஜாதிக்காரன் ஒருவன் வழியாக பொன்னன் சரக்குகளை வாங்கி, ஒரு சிறு கடை வைத்தான்; தரகு கூலியையும், மண்டி வாடகையையுஞ் சேர்த்து விலைவைத்ததில், சாமான்களின் கிரயம் அதிகமாய்விட்டது. வாங்குபவரில்லை. நஷ்டம் வந்தது.

பொன்னனும் அவன் மனைவியும் இப்பொழுது ஒரு பெரிய பருத்தி யந்திரசாலையில் வேலையாயிருந்தார்கள். மனையாள் காலையில் 4-மணிக்கே துயிலெழுந்து சமையல் முதலானதைச் செய்வாள். அவர்கள் யந்திரசாலையிலிருக்கும் வேளையில், அவர்கள் குழந்தையை அயல்வீட்டுக்காரர் பார்த்துக் கொள்வார்கள்; அதற்காக பொன்னன் அவர்களுக்கு ஏதோ கொஞ்சம் பணங்கொடுத்து வந்தான். இருவரும் திரும்பி வீடு வரும்பொழுது வெகு நேரமாகும். மனையாள் கொஞ்சம் முன்னமேயே வந்து குழந்தையை வாங்கிக்கொண்டு வீட்டு வேலையைப் பார்ப்பாள். ஆனால், பொன்னன் தினமும் வெகுநேரஞ்சென்று குடி வெறியிலேதான் வந்து சேருவான்.

கணவனும் மனைவியும் துன்பமுற்று வாழ்ந்தார்கள். பொன்னன் தன் தாயார் லக்ஷிமியைப்பற்றி அடிக்கடி நினைப்பான்! தன்னிலும் எவ்வளவோ குறைவாக சம்பாதித்தபோதிலும் தற்காலத்தைவிட எவ்வளவோ வதிகமான சுகத்தில் வசித்தார்கள். லக்ஷி ஒரு கொடும் வார்த்தை கூடச் சொன்னது கிடையாது. இப்பொழுதோ, தன் வேலை முடிந்து வீட்டிற்குப் போனதும், கோபமும் தூற்றலுந்தான் பொன்னனுக்குக் காணிக்கையாயிருந்தன. அவனுக்குக் குடி யதிகரித்தது.

அந்நகரத்தில் ஒருநாள் ஒரு பெரிய கூட்டங் கூடிற்று. மகாத்மா காந்தியின் சிஷ்யர்கள் அவ்விடத்தில் வந்து பாமர ஜனங்களுக்கு பிரசங்கஞ் செய்தார்கள். பொன்னனும் வேறு சில தொழிலாளிகளும் அங்கே போனார்கள். அவர்கள் சொன்ன வார்த்தைகள், எட்டிரண்டு மறியாத பேதையும், வெறியனுமான அவனுக்கும் அர்த்தமாகும்படியாயிருந்தன. "கட்குடியை விலக்குங்கள்; ராட்டினத்தைக் கைப்பிடியுங்க"ளென்று அவர்கள் பிரசங்கஞ்செய்தார்கள்.

"கீழ் ஜாதியாரென்று சொல்லி யொருவரையு மோட்டியடியாதேயுங்கள்: அவர்களும் நம் சகோதரர்கள்தான்."

பொன்னனுக்குத் தன் சிறு கடையின் ஞாபகமடிக்கடி வந்தது. எல்லோரையும்போல் வாங்கவும் விற்கவும் எனக்கு சாத்தியமாயிருந்தால், என் அருமைத் தாயின் பணம் நஷ்டமாயிருக்குமா? வென்று ஆலோசித்துக்கொண்டே, யன்று சாராயக்கடையை விட்டு விலகிச் சென்றான்.

வாஸ்தவத்தில் பொன்னன் பிராமணப் பையன்: ராதையின் குழந்தை; ஆனால் அந்த விஷயம் ஒருவருக்குந் தெரியாது. தெரியாததால் குற்றம் குறையுமோ; கொடுமை நீங்குமோ? எவ்விதத்திலும் குலத்தேற்றத் தாழ்ச்சி சொல்லப் பாபுமதானே? அஸ்பர்ச்யர் (தொடத்தகாதவர்) என்று மனிதரை விலக்குதல் உலக நடைக்கு ஒவ்வாததுதான்; ஆனால் மத விஷயத்திற்கு வேறு தீர்மானந்தானென்று சிலர் கொள்கை. அக்கொள்கை சரியல்ல; உண்மை வேறு. தொடத்தகாதவரென்று மனிதரை விலக்குங் கொடுமை உலகத்தில் சகல காரியங்களிலும் அநீதிக்குக் காரணமாயிருக்கிறது. ஸமுதாய வாழ்வென்னும் பயிரின்மேல், ஒரு நோய்போல் விழுந்து, கதிரும் பொதியுங் கண்டகாலத்தில் அளவற்ற நாசத்தை உண்டுபண்ணுகிற்து. அந்தோ! அறுப்பு அறுத்தால் வெறும் வைக்கோலே மிச்சம்; "உழுது விதைத் தறுப்பாருக் குணவில்லை"யென்று முடியும்; "பிணிகள் பல உண்டா"கும்; அனைவற்றிற்கும் இக்கொடுமையே காரணமாம். ஆனால் இந்தக்குறிப்பை யறிய ஞானக்கண் விழித்திருத்தல் வேண்டும்.

தனவந்தனும் ஏழையும்

(R. பஞ்சாபகேசன்.)

தற்காலத்தில் எல்லாவிடங்களிலும் ஓர் பெருங் கலகம் மனதிலும் வெளிப்படையாயும் நிகழ்ந்து வருகிறது. அது யாதெனில், மானிடர்களின் தனவந்தர்கள் என்றும் ஏழைகள் என்றும் வேற்றுமை இருப்பது ஏன். உலகில் அனுபவிக்கக்கூடிய பொருள்கள் யாவருக்கும் பொதுவே இருத்தலல்லவா நியாயமானது. அவ்வாறல்லாது சிலருக்கு அதிக உரிமை இருப்பதும், மற்றோர் கஷ்டப்படுவதும் கொடியதன்றோ! இவ்வித வேற்றுமை உண்டாகாமலிருக்கவே வழி தேடவேண்டும். இதன் மூல காரணத்தை யறிந்து அதை சீர்திருத்தல்வேண்டும். இவ்வாறாக பல ஜனங்கள் பலவிதமாக நினைத்து துன்பங்களை அகற்ற வழி தெரியாது வருந்துகின்றனர். சிலர், ஆகாரத்திற்கு வேண்டிய தானியங்கள் விளையும் நிலங்களை ஸரிஸமமாக தேசத்து ஜனங்களுக்கு பங்கிட்டுக்கொடுத்துவிடுதல் கூடாதோ என்றெண்ணுகின்றனர். சிலர் நிலங்களையும் மற்றைய பொருள்களையும் ராஜாங்கத்தாரே ஏற்றுக்கொண்டு அவரவர்களுக்கு ஏற்றவாறு வேலையிட்டு எல்லோரையும் ஏன் போஷித்து வரக்கூடாது என்று நினைக்கின்றனர். மற்றும் சிலர் பூமியிலுள்ள தனமெல்லாம் வேலையாளர்கள் உண்டாக்கியதென்றும், ஆகையால் அவர்களே அதற்கு உரியவரென்றும் உரைக்கிறார்கள். கடைசியாக யாரும் உற்றதான உபாயத்தை கண்டாரில்லை. ருஷியாவில் இம்மாதிரி அதிருப்தி ஜனங்களுக்கு உண்டாகி உணவுக்கே திண்டாடிய கதைகள் நம் மனதைவிட்டு இன்னும் ஒழிந்தபாடில்லை. பிரான்ஸில் இவ்வித அதிருப்தியால் ராஜாங்கப்புரட்சியுண்டாகி, ஒருவருக்கொருவர் பகையுண்டு மாண்டவர்களைச் சரித்திர மூலமாய் அறிந்திருக்கிறோம்.

வெகு காலமாக நமது நன்மைக்குப் பொருந்திய சட்ட திட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் கைக்கொண்டிருக்கிறோம். அவற்றை சுலுவில் மாற்ற எண்ணுவது தீமையையே விளைவிக்கும். கடவுளே தனவந்தர்கள் ஏழைகளென்ற வேற்றுமை அதிகரிக்காமலிருக்க உபாயம் செய்திருக்கிறார். தனவந்தர்கள் தங்கள் தனத்தையெல்லாம் அனுபவிப்பதென்றால் உணவு பொருள்களை அதிகமாய் வாங்கி புசிப்பது இயலாது. மனிதனுடைய வயிறு அளவுள்ளதே. அளவுக்கு மேல் ஆகாரத்தை ஏற்பதில்லை. இந்த அளவுக்கு மேல்பட்ட தனத்தை வேறு பொருள்களின் பொருட்டு செலவு செய்தே தீரவேண்டும். இவ்விதம் வேறு பொருள்களைச்செய்து அளிப்பவர்கள் பிழைக்கிறார்கள். இந்நிலைமையில் இருக்கும் குறைகளை நீக்குதல் கூடுமோவென்று தீர ஆலோசித்தே மாறுதல்களைக் கருதவேண்டும். குறைகள் இருக்கையில், அதிருப்தி உண்டாகும். அப்போதுதான் சீர்திருத்தம் ஏற்படும். அதிருப்தி நிகழவேண்டியது விரும்பத்தக்கதே. எனினும் அது ஓர் எல்லையைக்கடந்து செல்லலாகாது. அளவுக்கு மிஞ்சிய அதிருப்தி ஓர் கொடிய வியாதி. இதை ஓர் தீய குணமென்றே சொல்லல்வேண்டும். அதிருப்தி என்ற ஓர் மனநிலை எப்போது விரும்பத்தக்கது எப்போது வெறுக்கத்தக்கதென்பதை சற்று விளக்குவோம். ஓர் குடும்பத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு அதன் அங்கத்தினர் ஒவ்வொருவரும் எவ்வாறு தனித்தனியேயும் சேர்ந்தும் நடந்துகொள்ளவேண்டும் என்பதை கவனித்தால், அதிருப்தி எவ்வளவுவரை இருக்கலாம் என்பது விளங்கும்.

தகப்பன், தாய், சகோதரர், சகோதரி முதலியவர்கள் குடும்பத்து அங்கத்தினர்கள். அவர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு குணம், திறமை புத்தியுடையவர்களாயிருப்பது இயற்கை. இத்தகைய குடும்பம் முற்போக்கடைவது முக்கிய நோக்கம். சண்டை, சச்சரவுகள் குடும்பத்தில் நேரக்கூடும். சகோதரர்கள் ஒருவருக்கொருவர் அல்ப விஷயத்தில் பகை கொள்ளலாம். ஒருவருடைய நடத்தை மற்றவருக்கு திருப்திகரமாய் இராது. அதிருப்தி ஏற்படும்போது, அதை வெளி

யிட்டு திருத்திக்கொள்வது நன்மையை பயக்கும். குடும்பம் மேன்மை யடைவது உத்தேசித்து அதன் அங்கத்தினர்கள் தீராப்பகை கொள்ளாது பார்த்துக்கொள்ளவேண்டியது பெரியோர்களுடைய கடமை. இவ்விதமே ஜன சமூகத்தாரும் தங்கள் பொது நன்மையை கவனித்து அதிருப்தியானது எங்கும் அதிகமாகாது நடக்கவேண்டும். எக்காலத்திலும் சட்டங்களை எவ்விதம் மாற்றினாலும், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாஸம் இருந்தேவரும். சமூகவாழ்வு உயரவேண்டுமானால், தங்களுடைய புத்திவன்மையாலும் தேகவன்மையினாலும் உழைத்துத் தேடிய பொருள்களை தாங்களே அனுபவிப்பதற்கு சௌகரியமிருக்க வேண்டும். இந்நிலைமைக்கு மாறாக இருந்தால் உழைக்கக்கூடியவர்கள் உழைக்கமாட்டார்கள்.

புயற்காற்று

(ஸ்ரீமான் V. நாராயணையர் M. A. M. L. எழுதியது)

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நத பாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பிவரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும், வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி நாடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும் அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டு விட்டதும், சென்ற சஞ்சிகை களிலுள்ள கதை)

மறுநாட்காலை யோகேந்திரன் வெளியூரிலிருந்து கல்கத்தாவுக்குத் திரும்ப வந்தான். அன்று சனிக்கிழமை; மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யல்லவா ஹேமநளினிக்குக் கலியாணமென்று நிச்சயிக்கப்பட்டிருந்தது; அப்படியிருக்க, தான் எதிர்பார்த்தபடி வீடெல்லாம் அலங்கரிக்கப்பட்டு எங்கும் கல்யாண முழக்கமாய் இருக்கவில்லை. வாயிற் புறத்தில் மாவிலை முதலிய தோரணங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இதுதான் கல்லியாணவீடு என்று மற்றபக்கத்து வீடுகளினின்றும் வேறாகி அழகுற விளங்கவில்லையே.

யாரேனும் திடீரென நோயுற்றனரோ என்ற பயம் உண்டாயிற்று; ஆனாலும் வீட்டிற்குள் புகும்போது அப்படி ஒன்றும் அகஸ்மாத்தாய் ஏற்படவில்லை என்று விளங்கிற்று. தன் வரவை எதிர்பார்த்து சாப்பாடு தயாராக விருந்தது. அந்நதபாபு மேஜைப்புறத்தில் சாமாசாரப் பத்திரிகையுமாய் தன்முன் பாதி சாப்பிட்டான "டீ" கோப்பையிலிருக்க, இவன் வரவை நோக்கி காத்திருந்தார்.

"ஹேமாவின் உடம்பு சௌக்கியந்தானே" என்று விசாரித்துக்கொண்டே உள்ளே நுழைந்தான் யோகேந்திரன்.

அந்நதபாபு: "ஆமாம்; சௌக்கியந்தான்."

யோகேந்திரன்: "பின் ஏன் கல்யாணத்திற்குத் தடை?"

அந்நதபாபு: அடுத்த ஞாயிற்றுக்கிழமை நிச்சயித்திருக்கிறது.

யோகேந்திரன்: "ஏன் அப்படி? எதற்காக ஒதுக்கிவைத்தீர்கள்?"

அந்நதபாபு: "அதைப்பற்றி உன் சிநேகிதனைத் தான் கேட்க வேண்டும். எங்களிடம் இராமேசன் ஏதோ தீராத அவசரமான காரியம் இருப்பதாயும் அதனால் நாளை ஞாயிற்றுக்கிழமை கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று மட்டும் சொன்னான்; விபரம் ஒன்றும் தெரியாது."

இப்படி தன் தகப்பனார் அசிரத்தையாக இருந்தாரே என்று யோகேந்திரன் அவரை தன் மனதுள் வைதுகொண்டே "நான்சற்று இங்கே இல்லாவிட்டால் எல்லாவற்றையும் இப்படியே குழப்பி விடுகிறீர்கள், அப்பா! அப்படி என்ன அவசரகாரியம் அவனுக்கு? தனக்குத்தானே யஜமானன்; சௌகரியத்தை கவனிக்கவேண்டுமென்ற அவ்வளவு நெருங்கிய சுற்றத்தாரும் இல்லை. ஏதாவது வேலையில் சிக்கிக்கொண்டிரா விட்டால் உங்களிடம் சொல்லக்கூடாதபடியான வேறு என்ன தடை ஏற்பட்டிருக்கும் என்பது எனக்குத் தோன்றவில்லை. மேல்க் கேள்வி கேட்டறியாமல் ஏன் அப்படியே இருந்தீர்கள்?"

'அதனாலென்ன, அவன் ஓடிப்போய் விடவில்லையே! நீயே வேண்டுமானால் நேரிலே கேட்டறியலாமே.' ஒரு கோப்பை டீயை ஒரே மூச்சாய் அருந்தி வெளியே விரைந்து சென்றான் யோகேந்திரன். "இரு, இரு, யோகா," என்று அந்நதபாபு "இதென்ன அவசரம் இது! ஒன்றும் சாப்பிடக் கூடவில்லையே." என்று சொன்னது யோகேந்திரன் காதில் விழவில்லை. அடுத்த வீட்டிற்கு விரைந்து சென்று படபடவென்று மாடத்தில் ஏறி "இராமேசா! இராமேசா!" என்று கூப்பிட்டான். இராமேசன் சுவடு கூட அங்கே காணவில்லை. படுக்கையறையில் போய்ப்பார்த்தான். மாடியில் எங்கும் தேடினான். கீழே எல்லாவிடத்திலும் நுழைந்து பார்த்தான். எங்கு தேடியும் பயனில்லை. வேலைக்காரனைக் கண்டு யஜமானர் எங்கே என்று விசாரித்தான். "அவர் காலையிலேயே வெளியே புறப்பட்டுப் போனார்."

"எப்பொழுது வருவார், தெரியுமா?" போகும்போது துணிமணிகளை எடுத்துக் கொண்டு போனதாகவும் திரும்பிவர காலைந்து நாளாகும் என்று சொன்னதாகவும் அவர் எங்கு போயிருக்கிறார் என்பது தனக்குத் தெரியாதென்றும் அந்த வேலைக்காரன் சொல்லவே யோகேந்திரன் வீட்டுக்குத் திரும்பினான்.

அவன் திரும்ப சாப்பாட்டு மேஜைப்புறத்தில் அமர்ந்தபோது அவன் ஏதோ யோசிப்பவனாய் மெய்மறந்திருப்பது கண்டு,

"என்ன; என்ன ஆயிற்று?" என்றார் அந்நதபாபு. "என்ன ஆகும்! தன் பெண்ணுக்கு வரனுகப் பார்த்திருக்கும் பையனுடைய நடவடிக்கைகளைக் கூட சற்றும் கவனியாமல் உங்கள்போல் சும்மா இருந்தால்; அவனுடைய போக்கு வரவுகளைக்கூட நீங்கள் கவனிப்பதில்லை. அவன் அடுத்து இருந்தும் உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை."

அந்நதபாபு: "நேற்றிரவுகூட அங்கே இருந்தானே."

யோகேந்திரன்: "அவன் எங்கேயே போகிறான் என்பது கூட உங்களுக்குத் தெரியாது. எங்கே போயிருக்கிறான் என்பது அவன் வேலைக்காரனுக்கும் தெரியாதாம். இதில் ஏதோ மாயம் இருக்கவேண்டும். எனக்கு அது ஒன்றும் மனதிற்குப் பிடிக்கவில்லை; கவலைக்கிடமாயிருக்கிறது. நீங்கள் எப்படி அமைதியாய் இருக்கிறீர்களோ எனக்குத் தெரியவில்லை."

இப்படிக் குத்திக் குத்திப் பேசவே அந்நதபாபு அமர்ந்து இருக்க முடியவில்லை.

கவலையை எல்லாம் தன் முகத்திலேயே தாங்குபவர்போல் அந்நதபாபு "எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை."

முந்தினநாள் இரவு ஆந்நதபாபு இராமேசனை இலகுவாய் விட்டுவிட்டார், அவன் அதை நன்குணராமல் ஏதோ அவசரமான அவசிய காரியம் இருக்கிறது என்று சொன்னதுபோதும் என்று நினைத்து அதன்பிறகு தன்னிஷ்டப்படி நடக்கவேண்டிய காரியத்தை முடிக்கப்போகலாம் என்றும் போய் விட்டான் இராமேசன்.

யோகேந்திரன்: "ஹேமநளினி எங்கே?" அந்நதபாபு "வ்ழக்கத்தைவிட சீக்கிரமாகவே இன்றுடீ சாப்பிட்டாள்; மாடியில் இருக்கிறாள்."

"பாவம்! இப்படி இராமேசன் நடந்துகொண்டது அவளுக்கு வருத்தமாய் இருக்கிறது போலும்; அதனாலேதான் என்னைப்பார்க்க வெட்கி மாடிக்குப்போய் விட்டாள்," என்று சொல்லிக்கொண்டே, அவள் மனதில் புண்ணை ஆற்றுவதாய் யோகேந்திரன் மாடிக்குச் சென்றான். அங்கேஎல்லோரும் உட்கார்ந்து பேசும் அறையில் அவள் தனியே உட்கார்ந்திருந்தாள். யோகேந்திரனின் காலடி சத்தத்தைச் கேட்டு உடனே ஒரு புஸ்தகத்தை எடுத்துப் பிரித்துப் படிப்பதுபோல் பாசாங்கு செய்தாள். யோகேந்திரன் உள்ளே வந்ததும், புஸ்தகத்தை மூடிக்கொண்டு, சந்தோஷமாய் "ஓ. எப்போது வந்தாய்? ஏன் உடம்பு ஒரு மாதிரியாய் இருக்கிறது" என்று விசாரித்தாள்.

"பின் எப்படி இருக்கும்" என்று சொல்லிக்கொண்டே யோகேந்திரன் அங்கே ஒரு நாற்காலியில் அமர்ந்தான். "எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேன், ஹேமா. இருந்தாலும் நீ வருத்தப்படாதே நான் இங்கே இல்லாததினால் இப்படியெல்லாம் ஆயிற்று. எல்லாவற்றையும் நோக்கி விடுகிறேன், பார்" என்ற பிறகு, 'ஹேமா இராமேசன் உன்னிடம் காரணங்கள் எவையேனும் சொன்னானோ?'

ஹேமநளினிக்கு இந்தப்பேச்சு தர்மசங்கடமாயிருந்தது. அக்ஷயனும் யோகேந்திரனும் இவ்விதம் அநாவசியமாய் சந்தேகிப்பது அவளுக்கு வருத்தமாயிருந்தது. இராமேசன் தன்னிடம் கல்யாணத்தை ஒதுக்கி வைப்பதற்கு யாதொரு காரணமும் அறிவிக்கவில்லை என்று யோகேந்திரனிடம் ஒப்புக்கொள்வதற்கும் அவளுக்கு இஷ்டமில்லை. ஆனால் முழுப்பொய் புகலுவதும் கூடாதென்று "அவர் சொல்லத்தயாராக இருந்தார்; நான் தான் எதற்கு என்று கேட்காதிருந்துவிட்டேன்" என்று பதிலளித்தாள்.

"சுத்த அஹம்பாவம், நீ எப்போதும் இப்படித்தான்," ஹேமா, என்று யோகேந்திரன் மனதில் நினைத்துக்கொண்டு வெளிப்படையாய் "சரி, பயப்படாதே; அவனை இன்றே காரணங்களையெல்லாம் வெளியிடச் செய்கிறேன்."

தன்மடியிலிருந்த புஸ்தகத்தில் பக்கங்களை மெதுவாய் பிரித்துக்கொண்டே, ஹேமநளினி: "நான் ஒன்றுக்கும் பயப்படவில்லையே; நீயும் அவரை காரணங்களைச் சொல்லவேண்டுமென்று தொந்திரை செய்யாதிருந்தால் நன்றாயிருக்கும்."

"என்ன கர்வம் ஹேமாவுக்கு" என்று மறுபடியும் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு "சரி, சரி, அதைப்பற்றி நீ கவலைபடாதே" என்று யோகேந்திரன் புறப்படவே, ஹேமநளினி தன் நாற்காலியினின்றும் எழுந்து "இந்தா, இதைப் பற்றி ஒன்றுமே அவரிடம் சொல்லக்கூடாது, தெரியுமா; நீங்கள் என்னவேண்டுமானாலும் சந்தேகியுங்கள்; எனக்கு ஒரு சந்தேகமும் இல்லை."

கர்வம் கொண்டு பேசின பேச்சல்ல இது என்று யோகேந்திரனுக்குப் புலப்பட்டது. தன் பிரிய சகோதரியின்பால் தனக்குள்ள வாஞ்சையும் அநுதாபமும் மேலிடவே, தனக்குள்ளேயே புன் சிரிப்புடன் "படித்த பெண்களுக்கு உலகாநுபவம் ஒன்றுமே இருப்பதில்லை; புஸ்தகங்களினின்றும் எவ்வளவோ தெரிந்துகொள்கிறார்கள். ஆனால் சந்தேகத்திற்கிடமான காரியங்கள் நடக்கும்போது சூது வாது பயம் அறியாத குழந்தைகளாய் இருக்கிறார்களே!" என்று நினைத்து யோகேந்திரன் மனம் வருந்தினான். இவளுடைய சுத்த நம்பிக்கையும அவனுடைய மோசடி நடத்தையும் தன் மனதுள் ஒப்பிட்டு இராமேசன்மேல் மனம் கடிந்தவனாய் அவனை எப்படியாவது கட்டாயப்படுத்தி "காரணங்களை" வெளியாக்குவது என்ற நிர்மானத்தை திடப்படுத்திக்கொண்டு மறுபடியும் புறப்பட எழுந்தான். அப்போது ஹேமநளினி அவன் கையைப்பிடித்துக்கொண்டு,

"இதைப்பற்றி ஒன்றுமே அவரிடம் சொல்வதில்லை என்று வாக்குக்கொடு" என்று கேட்டாள். "சரி, பார்ப்போம்" என்றான் யோகேந்திரன்.

"பார்ப்போம் என்று சொல்லக்கூடாது ஆகட்டும் என்று உறுதியாய்ச் சொல்லவேண்டும். நீ இவ்விதம் கவலைகொள்ளவேண்டியதில்லை என்று நான் நிச்சயமாய்ச் சொல்கிறேன். இதை மட்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்விதம் ஹேமநளினிவற்புறுத்தியதினின்றும், அவளிடம் இராமேசன், காரணங்களை எல்லாம் அவசியம் சொல்லி இருக்கவேண்டும் என்று யோகேந்திரன் கருதினான். ஆனால் அவள் சொல்லியிருக்கும் காரணங்கள் உண்மையென்று நினைத்து சும்மா இருக்கக்கூடுமோ? ஏதாவது கன்னுப்பின்னுவென்று கட்டுக்கதை யொன்றைக் கல்பித்துக்கூட இவளை ஏமாற்றுவது சுலபமன்றோ? ஆகவே, "இந்தா, ஹேமா, சந்தேகிக்கவேண்டும் என்று நான் முன்வரவில்லை. இருந்தாலும் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் என்றால் அவளைப்பாதுகாக்கும் தந்தை சகோதரர் முதலியவர்களுக்குக்

கடமைகள் சில உண்டன்றோ? அவன் உன்னிடம் ஏதாவது காரணம் கூறி இருக்கலாம். அதை நீ வெளியிடாமலிருக்கலாம். ஆனால் அது போதாது; எங்களிடமும் அவன் அவைகளைத் தெரிவிக்கவேண்டாமா? வாஸ்தவத்தில், ஹேமா, இதைப்பற்றி விசாரிப்பது உனக்காக அல்ல. காரணத்தைக்கேட்டு நாங்களும் திருப்தியடைய வேண்டுமே. உனக்குக் கல்யாணமான பின்பு இவ்வித விஷயங்களில் நாங்கள் தலையிட்டுக்கொள்வோமா? அதுவரையில் எங்கள் கடமை" என்று சொல்லிக்கொண்டே வெளியிற் சென்றான்.

காதலர் பிறரறியாவண்ணம் மூடிவைக்கும் இரகசியங்கள் இப்படி வெளிப்பேச்சுக்கு இடமாயின், இராமேசனுக்கும் ஹேமநளினிக்கும் இருந்த பற்றுதல்— நாளடைவில் பழகப்பழக இறுகி இறுதியில் அவர்களைப்பிணைத்து பிரத்யேகமாய் அவர்களை ஒரு தனியுலகில் வைத்திருக்கும் என்று அவர்கள் ஆசையுடன் எதிர்பார்த்த பற்றுதல்—இப்பொழுது அவர்கள்மீது கருணையற்ற வெளிமனிதருக்கு வம்புப்பேச்சுக்கு இடமாயிற்று அல்லவா? இதெல்லாம் பெருங்காற்றுபோல் ஹேமநளினியைக்கலக்கிற்று. அவளுடைய நண்பர்களையும் தோழிகளையும் உறவினரையும் கூடக்காண்பதற்கு அவள் மனம் கூசிற்று. யோகேந்திரன் புறப்பட்டுப்போனதும் அப்படி ஒரு நாற்காலியில் சாய்ந்து அவளறையிலே தங்கி வெளிவராமல் இருந்தாள்.

யோகேந்திரன் வாசற்படியை யடையுமுன் அக்ஷயன் எதிர்வந்து "ஏ, யோகா! வந்துவிட்டாயா நீயும்! சமாசாரம் எல்லாம் தெரியுமல்லவா? நீ என்ன நினைக்கிறாய் இதைப்பற்றி" என்று சொல்லவே,

யோகேந்திரன் "நான் வெகு நேரம் யோசித்தேன் இதைப்பற்றி; ஆனால் வீணாய் பேசிப்பேசி பயனில்லை. ஊகிப்பதில் என்ன பிரயோஜனம் "டீ" மேஜையருகில் உட்கார்ந்து குதர்க்கம் பண்ண இது சமயமில்லை."

அக்ஷயன்: "குதர்க்கம் பண்ணுவதும் தத்துவம் காவியம் என்று பேசுவதும் நானல்லவே? காரியத்தை நடத்தவேண்டும் என்பதுதான் என் கொள்கை. அதற்காகவே இப்போது உன்னிடம வந்தேன்."

"சரி, வா காரியத்தைக் கவனிப்போம்" என்று ஆத்திரத்துடன் யோகேந்திரன் "இராமேசன் எங்கே போயிருக்கிறான் என்று உன்னால் சொல்ல முடியுமோ?"

"முடியும்."

"எங்கே"

"அதை இப்போது சொல்லமாட்டேன். இன்று மாலை மூன்றுமணிக்கு அவனிடம் உன்னைக்கொண்டுபோய் விடுகிறேன்." "ஏன் இப்பொழுது ஒன்றையும் சொல்லமாட்டேன் என்று ஒளிக்கிறாய்; ஏன் இப்படி யெல்லாரும் ஒளித்து ஒளித்துப்பேசுகிறீர்கள். கொஞ்சநாள் தேக சௌகரியத்திற்காக நான் வெளியூர் போய்வந்தால் அதற்குள்ளே என்னென்ன இரகசியங்கள் முளைத்து விடுகின்றன. சீ, சீ மறைத்துப்பேசுவது போதும், வெளியிட்டுச் சொல்லு, அப்பா" என்று யோகேந்திரன் ஆத்திரப்படவே,

அக்ஷயன்: "நீ இப்படிப்பேசுவது எனக்கு எவ்வளவோ சந்தோஷத்தைத் தருகிறது. மறைத்துப் பேசவில்லையென்று என்மீது எல்லாரும் கோபங்கொண்டார்கள். உன் சகோதரி என்னிடம் பேசமாட்டேன் என்றாள். உன்தகப்பனார் நீ பரம சந்தேகி என்று ஏசினார்; இராமேசபாபுவை நாம் கண்டால் அவரும் சந்தோஷத்துடன் பேசப் போகிறதில்லை என்று நிச்சயமாய் ஏற்படவே, நீ ஒருவன்தான் இருந்தாய். உன்னைக் காணவும் எனக்குப் பயமாக இருந்தது. நீ வெறும் வாய்ப் பேச்சோடு நிற்கமாட்டாய், உனக்கு எதிராய் நான் நிற்கமுடியாது என்று பயந்திருந்தேன்."

யோகேந்திரன் "இந்தா, அக்ஷயா! இந்தக் கோணல் வழிகள் ஒன்றும் எனக்கு பிடிக்காது. என்னிடம் ஏதோ சொல்ல வேண்டுமென்றிருக்கிறாய் என்று தெரிந்துகொண்டேன். அதை ஏன் மறைத்து மழுப்பிப்பேசுகிறாய். உண்மையை அப்படியே உள்ளபடி சொல்லிவிடு."

அக்ஷயன் "அப்படியே; ஆகட்டும், அடிமுதல் ஒழுங்காய் எல்லாவற்றையும் சொல்லுகிறேன் கேள். அதில் அநேக பாகங்கள் உனக்குப் புதிதாகத்தோன்றும்."

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும்அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப்பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பலவகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெற வேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளிவந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறை வேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்

துப்பறியும் நாவல்கள்.

சுந்தர் சிங்

அல்லது பாஸ்கர விலாஸ் படுகொலை ரூ 1-12

சிவ குமாரன்

அல்லது கொலைஞன் யார்? ரூ 1-0

ஞானம்பாள்

அல்லது கள்வர் கவர்ந்த கல்யாணப் பெண் ரூ 0-12

வி. நாராயணன் & கம்பெனி,

4, கொண்டி செட்டித் தெரு, சென்னை.

பாரத நாட்டின் நிலைமை.

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடென வும் புகழ்ப்பெற்றுப் பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக் கிடமாய்விட்டது ஒரு புறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்ம வர், புசிக்க வகையின்றியும், கூலிக்கு வேலையின்றி யும் கூக்குரலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கி றது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யா தென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச் சிறு நூலிலே பாக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலை மையெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலை யை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தின ரும் நன்குணர்ந்து, தேசத் தொழிலை விருத்தி செய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப் புற்றுச் சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டு மென்பதே இந்நூலின் நோக்க மாகும். விலை ரூபா. 1— 0—0

ஆரிய சரித்திரம். நீதிக் கதைகள்.

சுமார் 300-பக்கங்கள் உள்ளது; சித்திரப்படங் களும் அமையப்பெற்றது; நான்காம்பதிப்பு. தெள் ளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப் பட்டு அழகாய்ப் பயிண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூபா. 1—0—0

கணேஷ் கம்பெனி,

39, தம்புசெட்டித் தெரு, சென்னை.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழு தியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரி யன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது. விலை அணு 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அரு மையான நாவல். புதிய பதிப்பு 10. படங்க ளுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித் தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது. விலை ரு. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண் டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் இடையா. முதற் பதிப்பு விளம்பர மின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகை யில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற் பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணு 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

வி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக் கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அட ங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிகக வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல் களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட் டிருக்கிறது. கோயம்புத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்த சிரோமணிகளுக்கு இநநூல் மிகவும் உபயோக மானது. விலை அணு 4.

சிறைவாசஞ் செய்யும்

கிருஷ்ணஸ்வாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மடிக்கிளர்ச்சி யுண்டாக்ககூடியதாயுமுள்ளது. இன்பச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமை யுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையில் எழுதி யது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவ ரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

"தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன், எம்.ஏ. அவர்களால் வெளியிடப்பட்டு வரும் இவ்வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமதுஅபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். 'சித்திரா'வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ் நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை.

சுதேசமித்திரன், 16—8—1922

தமிழ் உலகு

(THE TAMIL WORLD)

ஞாயிற்றுகிழமை தோறும் வெளிவரும்

தமிழ் வாரப் பத்திரிகை

பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் 3 0 0	½-வருஷம் 3 8 0
1-வருஷம் 5 0 0	1-வருஷம் 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில்மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

விளம்பர விகிதம்:— சென்னை மைலாப்பூர், 16, பசுபதி அக்கிரஹாரம் "தமிழ் உலகு" மானேஜருக்கு எழுதி யறிந்துகொள்ளவும்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.